**தத்துவஞானி பிளேட்டோ**

கி.மு 427 ல் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தார் பிளேட்டோ. இசையில், ஓவியம் வரைவதில் அதிக நாட்டமுள்ளவர். இளவயதில் ராணுவத்திலும் இருந்தார். எட்டு ஆண்டுகள் சாக்ரட்டீசின் சீடராயிருந்தார். இதுவே ஏதென்சில் வாழுவதற்கு ஆபத்தாக அமைந்தது. அவரது 30வது வயதில் எதென்சை விட்டு வெளியேறி இத்தாலி, எகிப்த்து, ஆபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கு பிரயாணப்பட்டார். பன்னிரண்டு ஆண்டுகளின் பின் ஏதென்சுக்கு திரும்பி வந்தார். வருங்கால சந்ததியை அறிவியல் ரீதியாக வளர்த்துவிட வேண்டும் என்ற நோக்கில் பிளேட்டோ அக்கடமி என்ற கல்விக்கூடத்தை நிறுவினார். இதுவே உலகில் முதல் முதல் தோன்றிய பல்கலைக் கழகமாகும். ஐரோப்பாவில் தலை சிறந்த அறிவியலாளர்கள் இந்த கல்விக் கூடத்தில் கற்றவர்களாகும். அதில் தத்துவஞானிஅரிஸ்ட்டோடில் முக்கியமானவர். பிளேட்டோவின் இறுதிக் காலத்தில் “த ரீ பப்ளிக்” என்ற நூலை எழுதினார். ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் என்ற அறிவியல் சித்தாந்த நூலாக அது இருந்தது. கணிதவியல் அறிஞராகவும், சிறந்த எழுத்தாளராகவுமிருந்தார். கி.மு 347ல் இவர் மரித்தார்.

**கேள்வி**:

பிளேட்டோ கடவுள் நம்பிக்கையுள்ளவரா?

**பதில்**:

தத்துவஞானிகள் என்றாலே அறிவை நேசிப்பவர்களாகும். இவர்களுக்கு கடவுள் மூளைதான் (அறிவு). பிளேட்டோவின் எண்ணங்களை, அறிவார்ந்த நல்ல செயல்களை வரவேற்க வேண்டும். அவர்களுடைய வெற்றி செயல்கள் தங்களது சுய பெலத்தால் வந்தது என்ற நிலைப்பாட்டையும், தேவன் இல்லை என்பதையுமே ஏற்றுக்கொள்ள முடியாது. வேதத்தில் மோசே எனும் பரிசுத்தவான் பிளேட்டோவுக்கு பிறாப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். கர்த்தருக்கு பயந்து அவரின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து அவரோடு வாழ்ந்தவர். சிறு வயதில் எகிப்த்திய பார்வோனின் அரண்மனையில் பல கலைகளை கற்றவர். ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய ஐந்து புத்தகங்களை எழுதினார். நீதிமன்றம், காவல்துறை, கல்விக்கூடங்கள் எதுவுமற்ற நாட்களில் பல லட்சம் மக்களை பல ஆண்டுகளாக வழிநடத்தினார். அவர் எழுதிய புத்தகங்களில் திருச்சட்டமும் உள்ளடக்கம், இதுவே நன்மை தீமையை வேறுபடுத்திக்காட்டியது. ஒரு மனிதன் நீதியாக வாழ்வதற்கும் ஒழுக்கமுள்ள சமுதாயத்தை வளர்த்தெடுக்கும் நோக்கத்தையும் கொண்டதாயிருந்தது. பின்நாளில் இதை வைத்தே பல நாடுகள் தங்கள் நாட்டின் சட்டக்கோவையை தயாரித்தார்கள். பரிசுத்த வேதாகமமே உலகில் அதிகளவாக அச்சிடப்பட்ட புத்தகமாகும். மோசே ஒரு போதும் தனது சுயபெலத்தால் தனக்கிருந்த அறிவால் இவற்றை சாதித்ததாக சொல்லவில்லை. மாறாக உபாகமம் 6:4,5 ல் இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழுஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்றேழுதியுள்ளார். பிள்ளைகளே நாம் எவ்வளவு உயரத்துக்கு போனாலும், எத்தனை பெரிய காரியம் சாதித்தாலும் அவையெல்லாம் தேவனுடைய உதவியில்லாமல் நாம் சாதிக்கமுடியாது. தேவன் தனதுசாயலில் எங்களை சிருஷ்டித்து, எங்கள் தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்யும் விதத்தில் இப்பூமியை தந்தார் என்பதை ஒரு போதும் மறக்கக் கூடாது.

துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான்; அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே. சங்கீதம் 10:4

**ஜெபம்**

யேகோவா ஹோசீனு (நம்மை உண்டாக்கின கர்த்தர்) நன்றியப்பா. ஒரு குறையும் இல்லாமல் வாழ வைத்துக்கொண்டிருக்கும் இயேசப்பா. உங்களை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்புகூருவோமாக. ஆமென்